# வணிகவரி மற்றும் பதிவுத் துறை

## மானியக் கோரிக்கை எண். 10
## வணிகவரிகள்

# கொள்கை விளக்கக் குறிப்பு
# 2017–2018


கே.சி வீரமணி
வணிகவரித் துறை அமைச்சர்



(C)
தமிழ்நாடு அரசு
2017

<u>பொருளடக்கம்</u>


| வரிசை எண். | | பொருள் | பக்கம் எண். |
|---|---|---|---|
| 1. | | முன்னுரை | 1 |
| 2. | | வருவாய் வசூலின் போக்கு | 2 |
| 3. | | கடந்த ஐந்தாண்டுகளில் சட்டங்கள் வாரியான வருவாய் | 3 |
| 4. | | நிர்வாக அமைப்பு | 4 |
| | அ | வரிவிதிப்புப் பிரிவு | 4 |
| | ஆ | தணிக்கைப் பிரிவு | 6 |
| | i) | மாநிலக் கணக்காயரின் தணிக்கை | 6 |
| | இ | மேல்முறையீட்டு பிரிவு | 7 |
| | i) | முதல் மேல்முறையீடு | 7 |
| | ii) | தமிழ்நாடு விற்பனை வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம் | 8 |
| | iii) | உயர் நீதிமன்றம் மற்றும் உச்ச நீதிமன்றத்தில் உள்ள வரி வழக்குகள் | 10 |
| | ஈ | செயலாக்கப் பிரிவு | 10 |
| | i) | செயலாக்கப் பிரிவு கோட்டங்கள் | 10 |
| | ii) | மாநிலங்களுக்கிடையேயான புலனாய்வுப் பிரிவு | 12 |
| | iii) | மாநில வர்த்தகப் புலனாய்வு அலகு | 12 |

| | | | |
|---|---|---|---|
| | iv) | கோட்ட வர்த்தகப் புலனாய்வு அலகு | 14 |
| | உ | புள்ளியியல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு | 14 |
| | ஊ | வணிகவரிப் பணியாளர் பயிற்சி நிலையம் | 16 |
| 5. | | துறையால் நிர்வகிக்கப்படும் சட்டங்கள் | 17 |
| 6. | | நிர்வாகச் செலவினம் | 18 |
| 7. | | சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (GST) | 19 |
| | i) | மத்திய மற்றும் மாநிலங்களின் வரி விதிப்பு அதிகாரங்கள் | 19 |
| | ii) | சரக்குகள் மற்றும் சேவைகள் வரி | 19 |
| | iii) | சரக்குகள் மற்றும் சேவைகள் வரி தொடர்பாக தமிழ்நாட்டின் நிலைப்பாடு | 20 |
| | iv) | சரக்குகள் மற்றும் சேவைகள் வரியினை அமல்படுத்துதல் | 25 |
| | v) | சரக்குகள் மற்றும் சேவைகள் வரியின் முக்கிய அம்சங்கள் | 27 |
| | vi) | சரக்குகள் மற்றும் சேவைகள் வரியின் கீழான வரி வீதங்கள் | 33 |
| | vii) | சரக்குகள் மற்றும் சேவைகள் வரி குறித்த விழிப்புணர்வு | 36 |
| | viii) | உதவி மையங்கள் | 38 |
| 8. | | வணிகர் நலன் | 39 |
| | i) | வணிகர் நல வாரியம் | 39 |
| | ii) | உறுப்பினர் புதுப்பித்தல் கட்டணம் | 39 |

| | | | |
|---|---|---|---|
| | iii) | நலத்திட்ட உதவிகள் | 40 |
| 9. | | கணினிமயமாக்கல் | 40 |
| | i) | முழுமையான கணினிமயமாக்கல் திட்டம் | 40 |
| | ii) | இணையவழி பதிவு | 42 |
| | iii) | இணையவழியில் சோதனைச் சாவடி படிவங்கள் உருவாக்குதல் (படிவம் JJ, KK, LL மற்றும் MM) | 43 |
| | iv) | மாதாந்திர நமூனாக்கள் சமர்ப்பித்தல் | 43 |
| | v) | இணையவழியில் வரி செலுத்துதல் | 43 |
| | vi) | மின்னணு முறையில் படிவங்கள் ‘C’ மற்றும் ‘F’ உருவாக்கிக் கொள்ளுதல் | 44 |
| | vii) | ஏற்றுமதியாளர்கள் வரி திருப்புகை பெறுவதற்காக, கேட்பு படிவத்தைத் தாக்கல் செய்யும் வசதி | 45 |
| | viii) | இணையதள வழியில் வருடாந்திர நமூனாக்களை சமர்ப்பித்தல் | 46 |
| | ix) | மற்ற இணையவழி சேவைகள் | 46 |
| | x) | துறைக்கு வழங்கப்பட்டுள்ள இணையவழி வசதிகள் | 47 |
| | xi) | வணிகர்களை சரக்கு மற்றும் சேவைகள் வரி இணைய தளத்திற்கு மாற்றுதல் | 48 |

| | | | |
|---|---|---|---|
| | xii) | தகவல்கள் மீளப் பெறுவதற்கான ஆய்வுக் கூடம் | 48 |
| 10. | | உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் | 49 |
| | அ | சென்னை நீங்கலாக பிற இடங்களில் வணிகவரி வரிவிதிப்பு வட்டங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டுதல் | 49 |
| | ஆ | சென்னையில் இயங்கி வரும் வரிவிதிப்பு அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டுதல் | 50 |
| | இ | ஒருங்கிணைந்த வணிகவரி அலுவலக வளாகம் கட்டுதல் | 51 |
| | ஈ | வரிவிதிப்பு அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டுதல் | 51 |
| | உ | கட்டடப் பராமரிப்பிற்கு கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்தல் | 52 |
| | ஊ | வாகனங்கள் வாங்குதல் | 53 |
| 11. | | 2005–ஆம் ஆண்டு தகவல் அறியு ம் உரிமைச் சட்டம் | 53 |

# கொள்கை விளக்கக் குறிப்பு
# 2017–2018
# வணிக வரித்துறை

**முன்னுரை**

மாநிலத்தின் சொந்த வரி வருவாயில் 78 விழுக்காட்டிற்கும் மேலாக வணிகவரித் துறை அளித்து வருகிறது. வணிகவரித்துறை, 2016–2017–ஆம் நிதியாண்டில் ரூ.67,576.77 கோடி மொத்த வருவாய் ஈட்டியுள்ளது. இது, கடந்த நிதியாண்டைக் காட்டிலும் 10.13 சதவிகிதம் வளர்ச்சி கண்டுள்ளது.

இவ்வாண்டு தொடக்கத்தில் பெட்ரோலியப் பொருட்களின் விலையில் ஏற்பட்ட வீழ்ச்சி, நவம்பர் 2016–ல் குறிப்பிட்ட ரூபாய் நோட்டுக்களின் மதிப்பு நீக்கம், டிசம்பர் 2016–ல் ஏற்பட்ட வர்தா புயல் மற்றும் அதன் பிறகு ஏற்பட்ட கடுமையான வறட்சி போன்ற இயற்கை இடர்பாடுகள் ஏற்பட்டிருந்தாலும், வணிகவரி வசூலில் வியக்கத்தக்க வளர்ச்சி எட்டப்பட்டது. இத்தகைய வருவாய் வளர்ச்சி, சிறப்பான வரி வசூல் முறையைக் கையாண்டதாலும், மேம்படுத்தப்பட்ட நிர்வாகத் திறமையினாலும் சாத்தியமாயிற்று. மார்ச் 2017–இல் பெட்ரோலியப் பொருட்களின் மீதான வரி சிறிதளவு உயர்த்தப்பட்டிருந்தாலும், தமிழகத்தில் பெட்ரோல் மற்றும்

டீசல் மீதான வரிவிகிதம் பிற தென் மாநிலங்களோடு ஒப்பிடுகையில் குறைவான அளவிலேயே உயர்த்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

## 2. வருவாய் வசூலின் போக்கு

துறையால் நிர்வகிக்கப்படும் அனைத்துச் சட்டங்களின் கீழ் கடந்த ஐந்தாண்டுகளில் வசூலிக்கப்பட்ட வரி வருவாய் விவரங்கள் பின்வருமாறு :—

அட்டவணை: **தமிழ்நாடு வரி வருவாய் 2012—2013 முதல் 2016—2017 வரை**

| வருடம் | வரி வருவாய் (ரூபாய் கோடியில்) |
|---|---|
| 2012—2013 | 47,885 |
| 2013—2014 | 56,852 |
| 2014—2015 | 60,314.61 |
| 2015—2016 | 61,709.58 |
| 2016—2017 | 67,576.77 |

முந்தைய ஆண்டைக் காட்டிலும் ரூ.5,867.19 கோடி கூடுதலாக வரி வருவாய் வசூலிக்கப்பட்டிருப்பது மேற்கண்ட அட்டவணையிலிருந்து தெரிய வருகிறது. இது 10.13 சதவிகிதம் என்கிற வளர்ச்சியை குறிக்கிறது. கொள்கை விளக்கக் குறிப்பின் இறுதியில் இணைக்கப்பட்டுள்ள வரைபடம்—1 இந்த வளர்ச்சியை எடுத்துக்காட்டுகிறது.

## 3. கடந்த ஐந்தாண்டுகளில் சட்டங்கள் வாரியான வருவாய்

கடந்த ஐந்து ஆண்டுகளில் பல்வேறு சட்டங்கள் வாரியான மொத்த வருவாய் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன:

**அட்டவணை: தமிழ்நாடு–சட்டவாரியான வரி வருவாய் வசூல் 2012–2013 முதல் 2016–2017 வரை**

(ரூபாய் கோடியில்)

| | சட்டம் | 2012–2013 | 2013–2014 | 2014–2015 | 2015–2016 | 2016–2017 |
|---|---|---|---|---|---|---|
| 1 | தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் சட்டம் (TNVAT Act) | 42,038 | 51,245 | 53,930.47 | 54,804.55 | 59,262.00 |
| 2 | மத்திய விற்பனை வரிச் சட்டம் (CST Act) | 2,904 | 3,116 | 3,811.17 | 4,037.76 | 5,125.20 |
| 3 | தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம் (TNGST Act) | 261 | 218 | 195.21 | 211.11 | 188.65 |
| 4 | கேளிக்கைகள் வரிச் சட்டம் (TNET Act) | 70 | 68 | 82.97 | 106.29 | 85.81 |
| 5 | பந்தய வரிச் சட்டம் (Betting Tax Act) | 6 | 5 | 5.60 | 5.65 | 7.86 |
| 6 | ஆடம்பரங்கள் வரிச் சட்டம் (Luxury Tax Act ) | 290 | 300 | 319.26 | 357.03 | 379.01 |
| 7 | நுழைவு வரிச் சட்டம் (வாகனம்) [Entry Tax Act (Vehicles)] | 2,316 | 1,900 | 1,969.93 | 2,187.19 | 2,528.24 |
| | **மொத்தம்** | **47,885** | **56,852** | **60,314.61** | **61,709.58** | **67,576.77** |

கொள்கை விளக்கக் குறிப்பின் இறுதியில் இணைக்கப்பட்டுள்ள வரைபடம்–2 வருவாய் போக்கினை எடுத்துக்காட்டுகிறது.

## 4. நிர்வாக அமைப்பு

துறையினால் நிர்வகிக்கப்படும் பல்வேறு சட்டங்களை திறமையான நிர்வாக அமைப்பின் உதவியுடன் வணிகவரித் துறை செயல்படுத்தி வருகிறது. சென்னை தலைமையிடத்தில் நிர்வாக தலைவராகச் செயல்படும் வணிகவரி ஆணையருக்கு உதவியாக, ஐந்து கூடுதல் ஆணையர்கள் மற்றும் ஓர் இணை ஆணையர் (நிர்வாகம்) ஆகியோர் உள்ளனர். துறையானது, பணிகளின் அடிப்படையில் அமைக்கப்பட்டு, அதன் பல்வேறு பொறுப்புகளை கீழே விவரிக்கப்பட்டுள்ளவாறு நான்கு வெவ்வேறு பிரிவுகளில் செயல்படுத்தி வருகின்றது:

### அ. வரிவிதிப்புப் பிரிவு

வரி நிர்வாகத்தில் அடிப்படையாக திகழும், மாநிலம் முழுவதும் உள்ள 334 வரிவிதிப்பு வட்டங்களில், உதவி ஆணையர்கள்/வணிக வரி அலுவலர்கள் தலைமையில் அடிப்படை பணிகளான பதிவுச் சான்று

வழங்குதல், வரி வசூலித்தல், நமூனாக்கள் கூர்ந்தாய்வு, வரி விதிப்பு போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இவ்வரி விதிப்பு அலுவலர்கள் முதற்கட்டமாக மாவட்ட / மண்டல அளவில் 40 துணை ஆணையர்களாலும், அடுத்த கட்டமாக கோட்ட அளவில் 10 இணை ஆணையர்களாலும் கண்காணிக்கப் படுகின்றனர்.

மேற்கண்ட வரிவிதிப்பு வட்டங்கள் தவிர சென்னையில் ஓர் இணை ஆணையரின் கட்டுப்பாட்டின் கீழ் நான்கு துணை ஆணையர்களைக் கொண்டு அதிக வரி செலுத்தும் 100 வணிகர்களை உள்ளடக்கிய ஓர் அதிக வரி செலுத்துவோருக்கான பிரிவு இயங்கி வருகிறது. இப்பிரிவு சென்னை மண்டலத்தில் வசூலிக்கப்படும் வரியில் ஏறக்குறைய 55 சதவிகித வரியினை வசூலித்து வருகிறது. இது தவிர கோயம்புத்தூர் கோட்டத்திலுள்ள 66 அதிக வரி செலுத்துவோருக்காக ஒரு துணை ஆணையரைத் தலைமையாகக் கொண்டு ஓர் அதிக வரி செலுத்துவோர் பிரிவும் இயங்கி வருகிறது. இது, அக்கோட்டத்தில் வசூலிக்கப்படும் வரியில் ஏறக்குறைய 40 விழுக்காடு வரியினை வசூலித்து வருகிறது.

### ஆ. தணிக்கைப் பிரிவு

தணிக்கை என்பது எந்த ஒரு வரி நிர்வாகத்திற்கும் உள்ளார்ந்த பகுதியாகும். சரியான வரித்தொகையைக் கண்டறிதல், வரிவிதிப்பில் ஏற்படும் தவறுகளைச் சுட்டிக்காட்டுதல், வரித் திருப்புகை மூலம் அரசின் நிதி கசிந்தோடாமல் ஆவணங்களை சரிபார்த்து தடுத்தல் மற்றும் சட்டத்திற்குப் புறம்பான அல்லது தகாத செயல்களை தடுத்து நிறுத்துதல் போன்றவை தணிக்கையின் முக்கிய நோக்கங்களாகும்.

ஒவ்வொரு வணிகவரி கோட்டமும் ஓர் உதவி ஆணையர் மற்றும் வணிகவரி அலுவலர் தலைமையில் உள்ளீட்டுத் தணிக்கைக் குழுவை கொண்டுள்ளது. இந்த உள்ளீட்டு தணிக்கைக் குழுக்கள் இணை ஆணையர்களால் வகுக்கப்படும் அட்டவணையின் அடிப்படையில் வரிவிதிப்பு வட்டங்கள் மற்றும் சோதனைச் சாவடிகளில் தொடர் தணிக்கையினை மேற்கொள்கின்றன.

#### i) மாநிலக் கணக்காயரின் தணிக்கை

வரிவிதிப்பு வட்டங்களில் மாநிலக் கணக்காயரால் வருடாந்திர தணிக்கை மேற்கொள்ளப்படுகிறது. மேலும்,

துறையின் அவ்வப்போதான செயல்திறன் தணிக்கை தவிர பல்வேறு பொருள் சார்ந்த ஆய்வும் மாநில கணக்காயரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மாநிலக் கணக்காயரால் சுட்டிக்காட்டப்படும் முக்கியத்துவம் வாய்ந்த தணிக்கைக் குறிப்புகள் வணிகவரி ஆணையர் மற்றும் மாநில கணக்காயர் அலுவலகத்தின் உயர்அலுவலர்கள் கலந்து கொள்ளும் வணிகவரி மற்றும் பதிவுத் துறையின் அரசுச் செயலாளர் அவர்களால் தொடர்ச்சியாக நடத்தப்படும் துறையளவிலான தணிக்கைக் குழுக் கூட்டங்களில் விவாதிக்கப்படுகின்றன.

**இ. மேல்முறையீட்டு பிரிவு**

**i) முதல் மேல்முறையீடு**

உதவி ஆணையர் வரையிலான வரிவிதிப்பு அலுவலரின் ஆணைக்கு எதிரான முதல் மேல்முறையீடு, அதிகார வரம்பிற்குட்பட்ட மேல்முறையீட்டு துணை ஆணையரிடமும், துணை ஆணையரின் வரிவிதிப்பு ஆணைகளுக்கு எதிரான மேல்முறையீடு, அதிகார வரம்பிற்குட்பட்ட மேல்முறையீட்டு இணை ஆணையரிடமும் உள்ளது. மாநிலத்தில் 20

மேல்முறையீட்டு துணை ஆணையர்களும் 2 மேல்முறையீட்டு இணை ஆணையர்களும் இத்துறையின் மேல்முறையீட்டுப் பிரிவில் இயங்கி வருகின்றனர். மேல்முறையீட்டு அதிகார அமைப்புகளிடம் தாக்கல் செய்யப்படும் மேல்முறையீடுகளில், ஒவ்வொரு மேல்முறையீட்டு மன்றத்திலும் துறையின் வழக்குகளை முன்வைத்திடும் பொருட்டு, உதவி ஆணையர் பணி நிலையில் துறைப் பிரதிநிதிகள் நியமிக்கப்படுகின்றனர்.

**ii) தமிழ்நாடு விற்பனை வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம்**

முதல் மேல்முறையீட்டு அதிகார அமைப்பினால், அதாவது, மேல்முறையீட்டு துணை ஆணையர்கள் / இணை ஆணையர்களால் பிறப்பிக்கப்படும் ஆணைகளுக்கு எதிராக தமிழ்நாடு விற்பனை வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தில் மேல்முறையீடு செய்யலாம். தீர்ப்பாயத்தின் முதன்மை அமர்வு சென்னையிலும், கூடுதல் அமர்வுகள் சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூரிலும் அமைந்துள்ளன. மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் முதன்மை அமர்வு, மாவட்ட நீதிபதி நிலையில் உள்ளவரைத் தலைவராகக் கொண்டுள்ளது. இந்திய தணிக்கை மற்றும் கணக்குகள்

பணி அல்லது வருமான வரித்துறை அல்லது மத்திய கலால் துறை அல்லது சுங்கத் துறை அல்லது இரயில்வே கணக்குகள் துறை அல்லது பாதுகாப்பு கணக்குகள் துறை அல்லது இந்திய பட்டயக் கணக்கர்கள் நிறுவனம் அல்லது இந்திய விலை மதிப்பீட்டு கணக்கர்கள் நிறுவனத்தின் உறுப்பினர் யாரேனும் ஒருவர் இரண்டாவது உறுப்பினராக நியமிக்கப்படுவார். கூடுதல் ஆணையர் பணி நிலையில் உள்ள துறை அலுவலர் ஒருவர் துறை உறுப்பினராகவும் இத்தீர்ப்பாயத்தில் நியமிக்கப்படுவார்.

விற்பனைவரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் கூடுதல் அமர்வுகள், சார்நிலை நீதிபதி நிலையில் நீதித்துறை உறுப்பினர் ஒருவர் தலைமையிலும், இணை ஆணையர் பணி நிலையில் துறை சார்பாக கூடுதல் உறுப்பினர் ஒருவரைக் கொண்டும் இயங்கி வருகின்றன. வழக்குகளில் துறையின் வாதத்தினை முன்வைத்திடும் பொருட்டு இணை ஆணையர் பணி நிலையில் ஒரு மாநிலப் பிரதிநிதியும், துணை ஆணையர் பணி நிலையில் ஒரு கூடுதல் மாநிலப் பிரதிநிதியும், முறையே முதன்மை அமர்வு மற்றும் கூடுதல் அமர்வுகளில் வாதிடுவர்.

**iii) உயர் நீதிமன்றம் மற்றும் உச்ச நீதிமன்றத்தில் உள்ள வரி வழக்குகள்**

ஒரு கூடுதல் அரசு வழக்குரைஞர் (வரிகள்), அரசு வழக்குரைஞர் உதவியுடன் துறை சார்ந்த வரி வழக்குகள் தொடர்பாக துறையின் சார்பில் சென்னை உயர்நீதி மன்றம் மற்றும் சென்னை உயர்நீதி மன்றத்தின் மதுரை அமர்விலும் வாதிடுவார். துறைக்கு எதிரான நீதிப் பேராணைகள் தொடர்பாகவும் இவர்கள் வாதிடுவர். தமிழ்நாடு அரசு பதிவு வழக்கறிஞர் ஒருவர் உச்ச நீதிமன்றத்தில் துறை சார்பான வழக்குகளில் வாதிடுவார்.

**ஈ. செயலாக்கப் பிரிவு**

**i) செயலாக்கப் பிரிவு கோட்டங்கள்**

இப்பிரிவு, மாநிலம் முழுவதும் எட்டு செயலாக்கக் கோட்டங்களையும், சென்னையில் மாநிலங்களுக்கிடையேயான புலனாய்வுக் குழு ஒன்றையும் கொண்டுள்ளது. அனைத்து செயலாக்கப் பிரிவுகள் மற்றும் மாநிலங்களுக்கிடையேயான புலனாய்வுக் குழு, இணை ஆணையர்கள் தலைமையில் செயல்பட்டு வருகின்றன. திடீர் சோதனைகள் நடத்துவது மற்றும் வரிவிதிப்புக்குரியவர்களது வணிக இடங்களில் தள தணிக்கை மேற்கொண்டு, வரி ஏய்ப்பினைக்

கண்டுபிடித்து அதனை கட்டுப்படுத்துதலே செயலாக்கப் பிரிவின் முதன்மைப் பணியாகும்.

ஆந்திரபிரதேசம், கர்நாடகா, கேரளா மற்றும் புதுச்சேரி ஆகிய மாநில எல்லைகளில் அமைந்துள்ள 28 சோதனைச் சாவடிகளின் மூலம் மாநிலங்களுக்கிடையேயான சரக்கு போக்குவரத்து கண்காணிக்கப்படுகிறது. துறைமுக சரக்கு மையங்கள், மற்றும் ரயில் நிலையங்களில் 13 சோதனை முனையங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இது தவிர, மாநிலத்திற்குள்ளான சரக்குகளின் நடமாட்டத்தையும் 61 சுற்றுக் குழுக்கள் கண்காணித்து வருகின்றன. வரி ஏய்ப்பு தொடர்பான புலனாய்வு மேற்கொள்ளவும், தள தணிக்கை மேற்கொள்ளவும் மற்றும் வணிகர்களின் தொழில் இடத்தில் திடீர் ஆய்வுகள் மேற்கொள்ளவும் வணிகவரி அலுவலர் மற்றும் துணை வணிகவரி அலுவலர்களைக் கொண்ட 144 குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. இத்தகைய தணிக்கை மற்றும் ஆய்வின் அடிப்படையில் உருவாக்கப்படும் கருத்துருக்கள் சம்பந்தப்பட்ட வரிவிதிப்பு அலுவலர்களுக்கு அதனை நடைமுறைப்படுத்தி வரிவிதிப்பு மேற்கொள்ளும் பொருட்டு அனுப்பப்படுகின்றன.

### ii) மாநிலங்களுக்கிடையேயான புலனாய்வுப் பிரிவு

ஓர் இணை ஆணையர் தலைமையிலான, மாநிலங்களுக் கிடையேயான புலனாய்வுக் குழு, மாநிலங்களுக்கிடையேயான வணிகப் பரிவர்த்தனைகளில் வரி ஏய்ப்பினைக் கண்டுபிடிக்கவும், பிற மாநில அலுவலர்களுடன் ஒருங்கிணைந்து செயல்படுவதுடன், வரி தகவல்களை சரிபார்க்கும் பொருட்டு தகவல் பரிமாற்றம் செய்து கொள்கிறது. அவ்வாறு தகவல்களை சரிபார்ப்பதன் மூலம் தேவைப்படும் இனங்களில் கருத்துருக்கள் உருவாக்கப்பட்டு, செயல்படுத்துவதற்காக அனுப்பப்படுகின்றன. சில இனங்களில் புலனாய்வுக் கோப்புகள் உருவாக்கப்பட்டு மேல் நடவடிக்கையின் பொருட்டு சம்பந்தப்பட்ட செயலாக்கப் பிரிவு இணை ஆணையர்களுக்கு அனுப்பப்படுகின்றன.

### iii) மாநில வர்த்தகப் புலனாய்வு அலகு

வணிக வரி ஆணையர் அலுவலகத்தில், வணிக வரி ஆணையர் அவர்களின் நேரடி மேற்பார்வை மற்றும் கட்டுப்பாட்டில் வர்த்தகப் புலனாய்வு அலகு ஒன்று நிறுவப்பட்டுள்ளது. ஓர் இணை ஆணையர் தலைமையின் கீழ் ஒரு துணை ஆணையர், நான்கு உதவி ஆணையர்கள்

ஓர் உதவி கணினி நிரலர் (Computer Programmer) மற்றும் ஒரு புள்ளியியல் ஆய்வாளர் ஆகியோரைக் கொண்டு இப்பிரிவு அமைக்கப்பட்டுள்ளது. மாநில அளவிலான வர்த்தகப் புலனாய்வு அலகு, வணிகர்களின் நமூனாக்கள், துறையின் சோதனைச் சாவடிகளில் பெறப்பட்ட ஆவணங்கள், மத்திய அரசு நிறுவனங்களான மத்திய கலால் மற்றும் சுங்கவரி வாரியம் (Central Board of Excise and Customs) , மத்திய நேரடி வரி வாரியம் (Central Board of Direct Taxes), வெளிநாட்டு வர்த்தகத் தலைமை இயக்குநர் (Director General of Foreign Trade) ஆகியவற்றின் மூலம் சேகரிக்கப்பட்ட விவரங்கள் மற்றும் பிற மாநிலங்களின் நமூனாக்கள் மற்றும் சோதனைச்சாவடி தகவல்கள் ஆகியவற்றை, பெரிய அளவிலான வரி ஏய்ப்புகளைக் கண்டறிவதற்கு பயன்படுத்துகிறது. இவ்வாறு பெறப்படும் தகவல்களைத் தரவு பகுப்பாய்வு மேற்கொண்டு இதன் மூலம் முக்கிய அறிக்கைகள் தயார் செய்யப்பட்டு துறையின் நிர்வாகப் பிரிவு மற்றும் செயலாக்கப் பிரிவிற்கு வரி ஏய்ப்பினைத் தடுக்கும் பொருட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ள அனுப்பப்படுகின்றன.

**iv) கோட்ட வர்த்தகப் புலனாய்வு அலகு**

கோட்ட அளவிலான வர்த்தகப் புலனாய்வு அலகுகள் ஒவ்வொரு செயலாக்கக் கோட்டத்திலும் இணை ஆணையர்களின் நேரடிக் கட்டுப்பாட்டில் உருவாக்கப்பட்டுள்ளன. இவ்வலுவலர்கள் மாநில வர்த்தகப் புலனாய்வு அலகைப் போன்றே, கோட்டத்திற்குட்பட்ட உள்ளூர் அதிகாரிகள் அவர்களுடைய வரம்பிற்குள் கிடைத்த ஆதாரங்களைக் கொண்டு சேகரிக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் புலனாய்வு மேற்கொள்கின்றனர்.

**உ. புள்ளியியல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு**

தலைமையிடத்தில் புள்ளியியல் துறை இணை இயக்குநர் தலைமையில் புள்ளியியல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு உள்ளது. இப்பிரிவில், ஓர் இணை இயக்குநர் (புள்ளியியல்), இரு புள்ளியியல் அலுவலர்கள், ஒரு புள்ளியியல் ஆய்வாளர் மற்றும் இரு உதவி புள்ளியியல் ஆய்வாளர்களும் உள்ளனர்.

ஒவ்வொரு வணிகவரிக் கோட்டத்திலும், இணை ஆணையருக்கு உதவியாக ஓர் இளநிலை ஆராய்ச்சி அலுவலரும், துணை ஆணையர்களுக்கு உதவியாக

ஒவ்வொரு சரக / வணிகவரி மாவட்டத்திலும் ஒரு புள்ளியியல் ஆய்வாளரும் உள்ளனர்.

புள்ளியியல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு கீழ்கண்ட அறிக்கைகள்/ வெளியீடுகளை தொடர்ந்து வெளியிடுகின்றன:

1. ''வணிகவரித் துறை – நிர்வாக அறிக்கை'' – ஆண்டுதோறும்
2. ''வணிகவரித் துறையின் முக்கிய குறியீடுகள்'' – ஆண்டுதோறும்
3. வணிகவரித் துறையின் புள்ளி விவரத்தொகுப்பு – காலமுறை அறிக்கை – ஆண்டுதோறும்
4. அனைத்து கோட்டங்கள் மற்றும் மாநிலத்தின் 100 பெரு வணிகர்களின் வருவாய் பகுப்பாய்வு – மாதந்தோறும்
5. அனைத்து கோட்டங்கள் மற்றும் மாநிலத்தின் அதிக வருவாய் ஈட்டும் பொருட்கள் குறித்த வருவாய் பகுப்பாய்வு– மாதந்தோறும்
6. சட்ட வாரியான மற்றும் கோட்ட வாரியான வருவாய் அறிக்கை – மாதந்தோறும்
7. கோட்டங்களின் செயல்பாடு குறித்த அறிக்கை – மாதந்தோறும்

**ஊ. வணிகவரிப் பணியாளர் பயிற்சி நிலையம்**

வணிகவரிப் பணியாளர் பயிற்சி நிலையம் **1982–**ஆம் ஆண்டு முதல் இணை ஆணையர் பணித் தரத்தில் உள்ள ஓர் இயக்குநரின் தலைமையில் சென்னையில் இயங்கி வருகிறது. வணிகவரித் துறையில் உள்ள அனைத்து அலுவலர்களுக்கும் 'பணியிடைப் பயிற்சி' மற்றும் 'புத்தாக்கப் பயிற்சி' அளித்து வருகிறது. வேலூர், சேலம், கோயம்புத்தூர், திருச்சி, மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய கோட்டத் தலைமையிடங்களிலும் பயிற்சி அளிக்கப்படுகிறது. துறையிலுள்ள அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு அடிப்படை கணக்கீட்டுப் பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

**2015–2016–**ஆம் ஆண்டு முதல் மேற்காணும் பயிற்சிகளுடன் கீழ்க்காணும் சிறப்புப் பயிற்சிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது:-

- வணிகவரித் துறை இணை ஆணையர்கள் மற்றும் துணை ஆணையர்களுக்கு இந்திய மேலாண்மை பயிற்சி நிலையத்தில் மேலாண்மை பயிற்சி;
- வணிகவரி அலுவலர் மற்றும் துணை வணிகவரி அலுவலர்களுக்கு அண்ணா மேலாண்மை பயிற்சி நிலையத்தில் ஒரு நாள் மென்திறன் பயிற்சி; மற்றும்
- நேரடி நியமன உதவி ஆணையர்களுக்கு பணியிடை பயிற்சியின் ஒரு பகுதியாக அண்ணா மேலாண்மை பயிற்சி நிலையத்தில் மூன்று நாட்கள் மென்திறன் பயிற்சி.

## 5. துறையால் நிர்வகிக்கப்படும் சட்டங்கள்

வணிகவரித் துறையால் **30.6.2017** வரையில் பின்வரும் சட்டங்கள் நிர்வகிக்கப்பட்டன:–

1. **2006**–ஆம் ஆண்டைய தமிழ் நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டம் **(1.1.2007** முதல் **30.6.2017** வரை**)**
2. **1956**–ஆம் ஆண்டைய மத்திய விற்பனை வரிச் சட்டம்
3. **1959**–ஆம் ஆண்டைய தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம் **(31.12.2006** வரை**)**
4. **1970**–ஆம் ஆண்டைய தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரிச் சட்டம் **(31.12.2006** வரை**)**
5. **1939**–ஆம் ஆண்டைய தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம்
6. **1935**–ஆம் ஆண்டைய தமிழ்நாடு பந்தய வரிச் சட்டம்
7. **1981**–ஆம் ஆண்டைய தமிழ்நாடு ஆடம்பர வரிச் சட்டம்
8. **1990**–ஆம் ஆண்டைய தமிழ்நாடு உள்ளாட்சி பரப்பிடங்களுக்குள் மோட்டார் வாகனங்கள் நுழைவு மீதான வரிச் சட்டம்

9. **2001–**ஆம் ஆண்டைய தமிழ்நாடு உள்ளாட்சி பரப்பிடங்களுக்குள் சரக்குகள் நுழைவு மீதான வரிச் சட்டம் (சென்னை உயர்நீதிமன்றம் தனது **23.3.2007** நாளிட்ட தீர்ப்பின்படி இச்சட்டம் செல்லாது என ஆணையிட்டது. இதன் மீதான மேல்முறையீடு உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது)

10. **1983–**ஆம் ஆண்டைய தமிழ்நாடு விளம்பரங்கள் வரிச் சட்டம்

மேற்குறிப்பிட்ட வரிகளுக்கு மாற்றாக **1.7.2017** முதல் சரக்குகள் மற்றும் சேவைகள் வரி தமிழ்நாட்டில் அமல்படுத்தப்பட்டுள்ளது.

**6. நிர்வாகச் செலவினம்**

வணிகவரித் துறையில் குறைந்த செலவில் மேம்பட்ட வருவாயினை அடைவதில் நிர்வாகத் திறமை ஆண்டுக்காண்டு மேம்பட்டுள்ளது. நிர்வாக செலவினமானது, மொத்த வணிகவரி வருவாயில் ஒரு விழுக்காட்டைக்கூட எந்த ஒரு வருடத்திலும் கடந்ததில்லை.

## 7. சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (GST)

### (i) மத்திய மற்றும் மாநிலங்களின் வரிவிதிப்பு அதிகாரங்கள்

மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கிடையே மறைமுக வரியினை விதிப்பதற்கான அதிகாரத்தினை இந்திய அரசியலமைப்புச் சட்டம் வரையறை செய்கிறது. அதற்கிணங்க, சில சரக்குகளின் உற்பத்தி மீது மத்திய கலால் வரி, சில சேவைகள் வழங்குதல்களின் மீது சேவை வரி, சரக்குகளின் இடைமாநில விற்பனையின் மீது மத்திய விற்பனை வரி முதலிய வரிகளை மத்திய அரசு விதிக்கிறது. இதே போன்று, விற்பனைகள் மீது மதிப்புக்கூட்டு வரி, ஆடம்பர வரி, கேளிக்கை வரி, மாநிலத்திற்குள் நுழையும் சரக்குகள் மற்றும் வாகனங்கள் மீது நுழைவு வரி, பந்தைய வரி, விளம்பர வரி முதலிய வரிகளை மாநில அரசு விதிக்கிறது.

### (ii) சரக்குகள் மற்றும் சேவைகள் வரி

இந்தியாவில் மறைமுக வரி சீர்திருத்தத்தில் மேலும் ஒரு மாற்றத்தினை கொண்டு வரும் விதமாக, பல்வேறு மத்திய மற்றும் மாநில வரிகளை ஒருங்கிணைத்து

சரக்குகள் மற்றும் சேவைகள் வரி என்ற ஒற்றை வரியினை கொண்டு வருவதற்கு மத்திய அரசு முடிவு செய்தது. சரக்குகள் மற்றும் சேவைகள் வரியினை விதித்திட ஏதுவாக, 2016–ஆம் ஆண்டு அரசியலமைப்பு (101–ஆம் திருத்த) சட்டமானது 2016–ஆம் ஆண்டு செப்டம்பர் 8 அன்று பாராளுமன்றத்தால் இயற்றப்பட்டது.

### (iii) சரக்குகள் மற்றும் சேவைகள் வரி தொடர்பாக தமிழ்நாட்டின் நிலைப்பாடு

மாநிலங்களின் உரிமைகள் மற்றும் நிதி தன்னாட்சியினை பாதுகாப்பதில் தமிழ்நாடு எப்போதும் முன்னோடி மாநிலமாக திகழ்ந்து வருகிறது. 2014–ம் ஆண்டிலேயே, சரக்குகள் மற்றும் சேவைகள் வரி முறையினை சுமூகமாக அமல்படுத்துவதற்கு, அதன் தொடர்பான சில முக்கிய பிரச்சனைகளுக்கு தீர்வு காண வேண்டும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொலைநோக்குடன் குறிப்பிட்டிருந்தார்கள். அவற்றில் குறிப்பிடத்தக்கவை பின்வருமாறு:

- மாநிலங்களின் நிதி தன்னாட்சிக்கு சரக்குகள் மற்றும் சேவைகள் வரியினால் தாக்கம் ஏதும் ஏற்படக்கூடாது;

- உற்பத்தி மற்றும் ஏற்றுமதி அதிகம் கொண்ட மாநிலங்களுக்கு சரக்குகள் மற்றும் சேவைகள் வரியினால் வருவாய் இழப்பு ஏற்படக்கூடாது;
- அவ்வாறு ஏற்படக்கூடிய இழப்பினை மாநிலங்களுக்கு ஒரு தனி அமைப்பு கொண்டு ஈடு செய்ய உறுதி அளிக்க வேண்டும்;
- விளம்பப்பட்ட பொருட்கள் (Declared Goods) மீது குறைந்த வீதத்தில் வரி விதிக்க வேண்டும் என்பதால், அதன் தொடர்பாக எழக்கூடிய வரி வருவாய் இழப்புக்கு தீர்வு காண வேண்டும்;
- பெட்ரோலிய பொருட்கள் மற்றும் மனித நுகர்வுக்கான மதுபானங்களை சரக்குகள் மற்றும் சேவைகள் வரிவிதிப்புக்கு உட்படுத்தக் கூடாது;
- சரக்குகள் மற்றும் சேவைகள் வரி சட்டங்களை நிர்வகிப்பதில், மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு சரி சமமாக அதிகாரம் வழங்கிட வேண்டும்;
- சரக்குகள் மற்றும் சேவைகள் வரியின் கீழ் வணிகர்கள் மீது இரட்டிப்பு அதிகாரம் (Dual Control) செலுத்துவதை தவிர்க்க வேண்டும்;
- மாநிலத்தின் கடல் நீர்பரப்பில் (Territorial Waters) நடைபெறும் வணிகத்தின் மீது மாநிலத்திற்கு வரிவிதிக்கும் அதிகாரம் அளித்திட வேண்டும்;

- சரக்குகள் மற்றும் சேவைகள் வரியின் கீழ் வரி விதிப்பிற்கான உச்ச வரம்பு மற்றும் வரி விதிப்பில் இருந்து விலக்கு அளிக்க வேண்டிய இனங்களை நிர்ணயித்திட வேண்டும்; மற்றும்

- சரக்குகள் மற்றும் சேவைகள் வரியின் கீழ் நிர்ணயிக்கப்படும் வரி வீதமானது தற்பொழுது உள்ள வருவாய்க்கு நிகராக (Revenue Neutral) உள்ளவாறு இருத்தல் வேண்டும்.

மேற்குறிப்பிட்ட பிரச்சனைகளை பாராளுமன்றம் மற்றும் இதர அமைப்புகளில் தமிழ்நாடு தொடர்ந்து எழுப்பி வந்தது. இதன் விளைவாகவே அரசியலமைப்பு திருத்த சட்ட மசோதாவில் பல்வேறு கூறுகள் உரியவாறு மாற்றியமைக்கப்பட்டன. 2016–ஆம் ஆண்டு அரசியலமைப்பு (101–ஆம் திருத்த) சட்டம் பாராளுமன்றத்தால் இயற்றப்பட்ட பின்பு, மாநிலத்தின் உரிமைகளை பாதுகாத்திட சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றத்தில் தமிழ்நாடு மேலும் முனைப்பாகவும் ஆக்கபூர்வமாகவும் செயல்பட்டது. இது வரை நடத்தப்பட்டுள்ள சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றத்தின் 18 கூட்டங்களில், சரக்குகள் மற்றும் சேவைகள் வரி தொடர்பான பல்வேறு அம்சங்கள் குறித்து

தமிழ்நாடு பல கோரிக்கைகளை முன்வைத்தது. அதன் விளைவாக, பல பிரச்சனைகளுக்கு திருப்திகரமாக தீர்வு காணப்பட்டுள்ளது, குறிப்பாக:-

- **சரக்குகள் மற்றும் சேவைகள் வரி அமலாக்கத்தினால் மாநிலங்கள் எதிர்கொள்ளவுள்ள இழப்பினை ஈடு செய்வது:**

  சரக்குகள் மற்றும் சேவைகள் வரி அமலாக்கத்தினால் ஏற்படக்கூடிய வருவாய் இழப்பினை 5 ஆண்டுகளுக்கு தொடர்ச்சியாக ஈடு செய்யும் பொருட்டு, ஒரு தனி அமைப்பு சட்டரீதியாக உருவாக்கப்பட்டுள்ளது. நியாயமாகவும் வெளிப்படையாகவும் வரி வருவாய் இழப்பினைக் கணக்கிட்டு மாநிலங்களுக்கு அளிப்பதற்கு 2017–ஆம் ஆண்டு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (மாநிலங்களுக்குரிய இழப்பீடு) சட்டம் ஒன்று இயற்றப்பட்டுள்ளது. 2015–16–ஆம் ஆண்டின் வரி வருவாயினை அடிப்படையாகக் கொண்டு ஆண்டிற்கு 14% வளர்ச்சி விகிதத்தில், 5 ஆண்டுகளுக்கு இந்த வரி வருவாய் இழப்பு ஈடு செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது;

- விளம்பப்பட்ட பொருட்களுக்கு (Declared Goods) வழங்கப்பட இருந்த சிறப்பு சலுகை

அகற்றப்பட்டுள்ளது. இதன் மூலம் மாநிலத்தின் வருவாய் நலன் பாதுகாக்கப்பட்டுள்ளது;

- மனித நுகர்வுக்கான மதுபானங்கள் சரக்குகள் மற்றும் சேவைகள் வரி விதிப்பில் இருந்து வெளியே வைக்கப்பட்டுள்ளன;
- பெட்ரோலிய பொருட்கள் சரக்குகள் மற்றும் சேவைகள் வரி விதிப்பிலிருந்து தற்பொழுது வெளியே வைக்கப்பட்டுள்ளன;
- அனைத்து சட்டங்களையும் நிர்வகிப்பதற்கு மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு சரி சமமாக அதிகாரம் வழங்குதல் தொடர்பான மிகவும் கடினமான பிரச்சனைக்கு சுமூகமான தீர்வு காணப்பட்டுள்ளது ;
- சிறு வணிகர்களின் நலனை பாதுகாக்கும் பொருட்டு, ரூ.1.5 கோடிக்கு கீழ் விற்பனை அளவு கொண்டுள்ள 90% வணிகர்கள், மாநில அரசின் அதிகாரத்தின் கீழ் உட்படுவதற்கு வழிவகுக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 10% வணிகர்கள் மட்டுமே மத்திய அரசின் அதிகாரத்தின் கீழ் உட்படுவார்கள்.

மேலும், ரூ. 1.5 கோடிக்கு மேல் விற்பனை அளவு கொண்டுள்ள வணிகர்கள் 50:50 என்ற விகிதாசாரத்தில் மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு இடையே சமமாக பிரித்து நிர்வகிக்கப்படுவார்கள்;

- 12 கடல் மைல் எல்லைக்கு உட்பட்ட கடல் நீர்பரப்பு (Territorial Waters) பகுதிகளில் வரி வசூலிப்பதற்கு மாநில அரசுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது;

- தமிழ்நாட்டின் கருத்துக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு மத்திய சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (CGST), ஒருங்கிணைக்கப்பட்ட சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (IGST) மற்றும் சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (மாநிலங்களுக்குரிய இழப்பீடு) மசோதாக்கள் இறுதி செய்யப்பட்டு பின் அவை பாராளுமன்றத்தால் சட்டமாக்கப்பட்டுள்ளன;
- அதேபோல், பல்வேறு பொருட்கள் மீதான வரிவீதங்கள் தமிழ்நாடு எடுத்த முனைப்பான நடவடிக்கையின் காரணமாக குறைக்கப்பட்டுள்ளன.

### (iv) சரக்குகள் மற்றும் சேவைகள் வரியினை அமல்படுத்துதல்

2016–ஆம் ஆண்டு அரசியலமைப்பு (101–ஆம் திருத்த) சட்டத்தின் கூறுகள் 2016–ஆம் ஆண்டு செப்டம்பர் 16 அன்று மத்திய அரசால் நடைமுறைக்கு

கொண்டு வரப்பட்டன. **2017–**ஆம் ஆண்டு ஜுலை **1** முதல் நாடு முழுவதும் சரக்குகள் மற்றும் சேவைகள் வரியினை அமல்படுத்திடும் பொருட்டு, மத்திய சரக்குகள் மற்றும் சேவைகள் வரி சட்டம், ஒருங்கிணைக்கப்பட்ட சரக்குகள் மற்றும் சேவைகள் வரி சட்டம் மற்றும் சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (மாநிலங்களுக்குரிய இழப்பீடு) சட்டம் ஆகியவை மத்திய அரசால் இயற்றப்பட்டுள்ளன. சரக்குகள் மற்றும் சேவைகளின் (மாநில பட்டியலில் பதிவு **54–**ல் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களைத் தவிர்த்து) விநியோகத்தின் மீது சரக்குகள் மற்றும் சேவைகள் வரியினை விதித்திட ஏதுவாக மாநிலங்களும் தனியாக மாநில சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தினை இந்திய அரசியலமைப்பின் ஷரத்து **246A–**ன்படி இயற்றிட வேண்டும். அதற்கிணங்க, **2017–**ஆம் ஆண்டு ஜுன் **22–**ஆம் நாளன்று **2017–**ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டமானது தமிழ்நாடு சட்டமன்றத்தால் இயற்றப்பட்டு **2017–**ஆம் ஆண்டு ஜுலை **1** முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

## (v) சரக்குகள் மற்றும் சேவைகள் வரியின் முக்கிய அம்சங்கள்

| | | |
|---|---|---|
| (i) | சரக்குகள் மற்றும் சேவைகள் வரியின் கீழ் பின்வரும் மத்திய வரிகள் உள்ளடங்கும்:- | |
| | a) | மத்திய கலால் வரி ; |
| | b) | கலால் தீர்வை (மருத்துவ மற்றும் ஒப்பனை தயாரிப்புகள்); |
| | c) | கூடுதல் கலால் தீர்வை (சிறப்பு முக்கியத்துவம் வாய்ந்த பொருட்கள்); |
| | d) | கூடுதல் கலால் தீர்வை (ஜவுளி மற்றும் ஜவுளி பொருட்கள்); |
| | e) | கூடுதல் சுங்கத் தீர்வை (சரிசம தீர்வை என்று பொதுவாக அழைக்கப்படும்); |
| | f) | சிறப்பு கூடுதல் சுங்கத் தீர்வை; |
| | g) | சேவை வரி; மற்றும் |
| | h) | சரக்குகள் அல்லது சேவைகளின் விநியோகம் தொடர்பாக விதிக்கப்படும் மேல்வரிகள் (cess) மற்றும் உபரி வரிகள் (surcharges). |

| | | |
|---|---|---|
| (ii) | சரக்குகள் மற்றும் சேவைகள் வரியின் கீழ் பின்வரும் மாநில வரிகள் உள்ளடங்கும்:- | |
| | a) | மாநில மதிப்புக்கூட்டு வரி; |
| | b) | மத்திய விற்பனை வரி; |
| | c) | கொள்முதல் வரி; |
| | d) | ஆடம்பரங்கள் வரி; |
| | e) | நுழைவு வரி (அனைத்து வகையான); |
| | f) | கேளிக்கைகள் வரி (உள்ளாட்சி அமைப்புகளால் விதிக்கப்படுபவை தவிர); |
| | g) | விளம்பரங்கள் மீதான வரிகள்; |
| | h) | லாட்டரிகள் மீதான வரிகள்; மற்றும் |
| | i) | சரக்குகள் அல்லது சேவைகளின் விநியோகம் தொடர்பாக மாநிலங்களால் விதிக்கப்படும் மேல்வரிகள்(cess) மற்றும் உபரி வரிகள் (surcharges). |

| | |
|---|---|
| (iii) | சரக்குகள் மற்றும் சேவைகள் வரியானது, சரக்குகள் மற்றும் சேவைகளின் வழங்குகை மற்றும் இறக்குமதிகள் மீது விதிக்கப்படும் சேரிடம் சார்ந்த வரியாகும் (destination-based consumption tax) மற்றும் உற்பத்தியாளர்கள் மற்றும் சேவை வழங்குநர்கள் முனையிலிருந்து சில்லறை விற்பனையாளர் முனை வரையில் செலுத்தப்பட்ட வரியினை முழுமையாக மற்றும் தொடர்ச்சியாக ஈடு செய்யும் பயன்களைக் கொண்டுள்ளது. சரக்குகள் மற்றும் சேவைகள் வரியானது இறுதி நுகர்வோரிடம் வசூலிக்கப்படும். |
| (iv) | சரக்குகள் மற்றும் சேவைகள் வரியானது சரக்குகள் அல்லது சேவைகள் அல்லது இரண்டின் வழங்குகை தொடர்பான அனைத்து பரிவர்த்தனைகள் மீதும் மத்திய மற்றும் மாநில அரசுகளால் மத்திய சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மற்றும் மாநில சரக்குகள் மற்றும் சேவைகள் வரியினை ஒருசேர விதிப்பதாகும். |

| | |
|---|---|
| (v) | மனித நுகர்வுக்கான மதுபானம் தவிர்த்து அனைத்து சரக்குகள் மற்றும் சேவைகளுக்கு சரக்குகள் மற்றும் சேவைகள் வரியானது விதிக்கப்படும். |
| (vi) | பெட்ரோலியப் பொருட்கள் சரக்குகள் மற்றும் சேவைகள் வரிவிதிப்பிலிருந்து தற்பொழுது வெளியே வைக்கப்பட்டுள்ளன. |
| (vii) | புகையிலை மற்றும் புகையிலை பொருட்கள் சரக்குகள் மற்றும் சேவைகள் வரிக்கு உட்படும். கூடுதலாக, மத்திய கலால் வரியும் மத்திய அரசால் தொடர்ந்து விதிக்கப்படும். புகையிலை மற்றும் புகையிலை பொருட்கள் மீது இழப்பீடு தொடர்பான மேல்வரி விதிக்க இருப்பதால், கூடுதல் கலால் தீர்வை விதிப்பது தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது. |
| (viii) | மத்திய சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மற்றும் மாநில சரக்குகள் மற்றும் சேவைகள் வரியின் கூட்டான ஒருங்கிணைக்கப்பட்ட சரக்குகள் மற்றும் சேவைகள் வரியானது, இடைமாநில சரக்குகள் மற்றும் சேவைகள் (இருப்பு மாற்றங்கள் உள்ளடங்களாக) வழங்குகையின்போது மத்திய அரசால் விதிக்கப்பட்டு வசூலிக்கப்படும். |

| | |
|---|---|
| (ix) | ஏற்றுமதிகள் பூஜ்ஜிய வரிவீதத்திற்கு உட்படும். |
| (x) | இறக்குமதிகள் இடைமாநில வழங்குகைகளாக கருதப்படும். |
| (xi) | வணிகத்தின்போது அல்லது வணிகத்தின் மேலுமான நடவடிக்கையின்போது பயன்பட்ட அல்லது பயன்படுத்தப்பட கருதப்பட்ட சரக்குகள் அல்லது சேவைகள் அல்லது இரண்டின் வழங்குகை எதன் மீதும் செலுத்தப்பட்ட வரிகளுக்கு உள்ளீட்டு வரி வரவு பரவலாக கிடைக்கக்கூடும். |
| (xii) | மத்திய சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மற்றும் மாநில சரக்குகள் மற்றும் சேவைகள் வரி இரண்டின் கீழும் வரி செலுத்துவதற்கான உச்சவரம்பு பொதுவாக இருக்கும். ரூ.20 இலட்சத்திற்கு கீழ் ஆண்டு மொத்த விற்பனை அளவு கொண்டுள்ள வரி செலுத்துவோர் சரக்குகள் மற்றும் சேவைகள் வரி செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளனர். ரூ.75 இலட்சம் வரை ஆண்டு மொத்த விற்பனை அளவு கொண்டுள்ள குறைந்த வரி செலுத்துவோருக்கு (குறிப்பிட்ட வகையைச் சேர்ந்த உற்பத்தியாளர்கள் மற்றும் சேவை வழங்குநர்கள் உட்பட) இணக்க முறையில் (அதாவது உள்ளீட்டு வரி வரவின்றி ஒரே வீதத்தில் வரி |

| | |
|---|---|
| | செலுத்தம் செய்ய) வரி செலுத்த வகை செய்யப்பட்டுள்ளது. வரி செலுத்துவதற்கான உச்சவரம்பு மற்றும் இணக்க முறையின் கீழ் வரி செலுத்தம் மேற்கொள்வது ஆகிய இரண்டுமே வணிகர்களின் விருப்பத்தின் அடிப்படையிலேயே அமையும். |
| (xiii) | வெவ்வேறு வகையான நபர்கள் வெவ்வேறு குறிப்பிட்ட தேதிகளில் மின்னணுவியல் முறையில் அறிக்கை தாக்கல் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது. |
| (xiv) | வரி செலுத்துவோருக்கு internet banking, debit/credit card மற்றும் National Electronic Funds Transfer (NEFT) / Real Time Gross Settlement (RTGS) உள்ளடங்களான பல்வேறு விதமான வரி செலுத்தும் முறைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. |
| (xv) | துறையிடமிருந்து வரி தொடர்பான நேர்வுகளில் வரிசெலுத்துவோர் தெளிவுரை பெறுவதற்கு முன்தீர்மான அதிகார அமைப்பு நிறுவப்பட்டுள்ளது. |
| (xvi) | தற்போதுள்ள வரி செலுத்துவோர்களை சரக்குகள் மற்றும் சேவைகள் வரிக்கு சுமூகமாக மாற்றம் செய்திடுவதற்காக விரிவான மாறுதல் கால வகைமுறைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. |

## (vi) சரக்குகள் மற்றும் சேவைகள் வரியின் கீழான வரிவீதங்கள்

சரக்குகள் மற்றும் சேவைகள் வரியின் கீழ் வரிவீதங்களை நிர்ணயிப்பது சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றத்தின் பொறுப்பாகும். சரக்குகள் மற்றும் சேவைகளுக்கு 5%, 12%, 18% மற்றும் 28% என நான்கு நிலைகளிலான வரிவீதங்கள் உள்ளன. இது தவிர, சில சரக்குகள் மற்றும் சேவைகள் விலக்களிக்கப்பட்ட பட்டியலில் வைக்கப்பட்டுள்ளன. சில சரக்குகள் மற்றும் சேவைகள் மீது அவற்றை பெறுபவர் எதிரிடை கட்டண அடிப்படையில் (Reverse Charge basis) வரி செலுத்துதல் வேண்டும். விலையுயர்ந்த உலோகங்கள் மீது 3% வரி நிர்ணயிக்கப்பட்டுள்ளது. புகையிலை மற்றும் புகையிலை பொருட்கள், பான் மசாலா, காற்றூட்டப்பட்ட பானங்கள் (aerated drinks), மோட்டார் வாகனங்கள் போன்ற சில குறிப்பிட்ட ஆடம்பர மற்றும் தீங்கு விளைவிக்கும் பொருட்களுக்கு 28% மேல் கூடுதலாக மேல் வரி (cess), சரக்குகள் மற்றும் சேவைகள் வரியின் அமலாக்கத்தினால் மாநிலங்களுக்கு ஏற்படக்கூடிய வரி வருவாய் இழப்பை ஈடுகட்ட ஐந்தாண்டு காலத்திற்கு விதிக்கப்படும்.

மத்திய கலால், சேவை வரி மற்றும் மதிப்புக்கூட்டு வரி (இந்த வரிகளினால் ஏற்படக்கூடிய வரி மீது வரிச்சுமை உட்பட) ஆகியவற்றால் ஏற்படக்கூடிய தாக்கம் மற்றும் உள்ளடங்கியுள்ள வரிகள் மற்றும் மத்திய விற்பனை வரி, நுழைவு வரி போன்றவற்றால் ஏற்படக்கூடிய தாக்கம் ஆகியவற்றை கணக்கில் எடுத்துக் கொண்டுதான் மேற்குறிப்பிட்ட வரிவீதங்கள் மன்றத்தினால் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. மத்திய அரசு மற்றும் மாநில அரசுகளின் அலுவலர்கள் அடங்கிய வரிவீத நிர்ணய குழுவானது பல்வேறு அம்சங்களையும் தற்போது உள்ள வரித்தாக்கத்தினையும் (உள்ளடங்கியுள்ள வரிகள் உட்பட) கருத்தில் கொண்டு சில நேர்வுகளில் குறைந்த பட்ச/உயர்ந்த பட்ச சரக்குகள் மற்றும் சேவைகள் வரிவீதங்களை பரிந்துரைத்துள்ளது. எனினும், பெரும்பான்மையான பொருட்களின் விநியோகத்தினை பொறுத்தவரை சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றத்தால் ஒப்பளிக்கப்பட்ட வரித்தாக்கமானது தற்போது மத்திய மற்றும் மாநில அரசுகளால் விதிக்கப்படும் ஒட்டுமொத்த மறைமுக வரிவீதங்களைக் காட்டிலும் மிகவும் குறைவாகவே உள்ளது. 81 சதவிகிதம்

பொருட்கள் மீதான வரியானது 18 சதவிகிதம் மற்றும் அதற்கு குறைவான வரிவிகிதத்திலும், 19 சதவிகித பொருட்களுக்கு மட்டுமே 28 சதவிகிதத்திலும் வரி விதிக்கப்படுகிறது.

வரிவீதங்களை நிர்ணயிப்பது தொடர்பாகவும் பொருளாதாரத்தின் பல்வேறு துறை தொடர்பான குறிப்பிட்ட பிரச்சினைகளையும் தமிழ்நாடு அழுத்தமாக எடுத்துரைத்து வந்துள்ளது. மாநிலத்தின் இந்த விடாமுயற்சியின் காரணமாக சாமானிய மக்கள் பயன்படுத்தும் பல்வேறு பொருட்கள் வரிவீதத்திலிருந்து விலக்களிக்கப்பட்டோ அல்லது குறைந்தபட்ச வரிவீதத்திற்கோ உட்படுத்தப்பட்டுள்ளன.

பொருளாதாரத்தின் பல்வேறு துறைகளை பிரதிபலிக்கும் வகையில் மத்திய மற்றும் மாநில அரசுகளின் மூத்த அலுவலர்களைக் கொண்டு சம்பந்தப்பட்ட துறை குறித்தான பிரச்சினைகள் மற்றும் இன்னல்களை ஆய்வு செய்திடும் பொருட்டு 18 துறை ரீதியான குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த துறை ரீதியான அனைத்து குழுக்களிலும் தமிழ்நாட்டைச் சேர்ந்த அலுவலர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்கள் சம்பந்தப்பட்ட துறையைச் சார்ந்த வணிக மற்றும்

தொழில் அமைப்புகள்/வர்த்தக கூட்டமைப்புகளிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கைகளை ஆய்வு செய்து அவர்களோடு கலந்தாலோசித்து வருகின்றனர். சம்பந்தப்பட்ட துறை தொடர்பான குறிப்பிட்ட பிரச்சினைகள் சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றத்திற்கு கொண்டு செல்லப்படும் மற்றும் சரக்குகள் மற்றும் சேவைகள் வரி முறைக்கு சுமூகமாக மாற்றம் செய்வதற்கு ஏதுவாக வழிகாட்டி குறிப்புகள் (Guidance Notes) வெளியிடப்படும்.

### (vii) சரக்குகள் மற்றும் சேவைகள் வரி குறித்த விழிப்புணர்வு

நிர்வாகத் தலையீடு இல்லாத முறையின் அடிப்படையில் சரக்குகள் மற்றும் சேவைகள் வரியின் கீழ் அனைத்து பரிவர்த்தனைகள் மற்றும் நடைமுறைகள் மின்னணுவியல் முறையில் மட்டுமே நடைபெறும். இதனால் வரி அலுவலர்களுக்கும் வரி செலுத்துவோர்களுக்கும் இடையேயான நேரடி தொடர்பானது குறையும். தமிழ்நாட்டில் வணிகவரித் துறையானது முழுமையாக கணினிமயமாக்கப்பட்டு அனைத்து பரிவர்த்தனைகள் மற்றும் நடைமுறைகள், குறிப்பாக பதிவு, அறிக்கை தாக்கல் செய்தல், வரி செலுத்துதல், சட்டரீதியான படிவங்களை பெறுதல் போன்றவை மதிப்புக்கூட்டு வரி முறையின் கீழ் மின்னணுவியலாகவே நடைபெற்று வருகின்றன.

மாநிலத்திலுள்ள வணிகர்கள் மின்னணுவியலான பரிவர்த்தனைகள் தொடர்பாக ஏற்கெனவே பரிச்சயம் உள்ளதால், சரக்குகள் மற்றும் சேவைகள் வரி முறைக்கு தங்கு தடையின்றி மாறியுள்ளனர். மதிப்புக்கூட்டு வரிச் சட்டத்தின் கீழ் தற்போதுள்ள வணிகர்களில் 91 சதவிகித வணிகர்கள் சரக்குகள் மற்றும் சேவைகள் வரிக்கு மாறியுள்ளது இதற்கு சான்றாகும்.

சரக்குகள் மற்றும் சேவைகள் வரி தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கும் மற்றும் இந்த வரிமுறையின் அமலாக்கம் தொடர்பாக அவர்களுக்கு ஏற்படக்கூடிய ஐயங்களை களைந்திட வணிகவரித் துறையானது பெருமளவிலான நடவடிக்கைகளை துவக்கியுள்ளது. இந்த நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக, 28.06.2017 அன்று சென்னையில் மாண்புமிகு அமைச்சர் (மீன்வளம், நிதி மற்றும் பணியாளர் (ம) நிர்வாக சீர்திருத்தம்) மற்றும் மாண்புமிகு அமைச்சர் (வணிகவரி) அவர்களது தலைமையில் மாநில அளவிலான சரக்குகள் மற்றும் சேவைகள் வரி கருத்தரங்கம் நடத்தப்பட்டது. வணிகவரி வரிவிதிப்பு வட்டங்கள் மற்றும் வணிகவரி மாவட்டங்கள் தோறும் 712 கருத்தரங்கங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

**(viii) உதவி மையங்கள்**

வரி செலுத்துவோருக்கு உதவிடும் பொருட்டு வரிவிதிப்பு வட்டம் ஒவ்வொன்றிலும் உதவி மையங்கள் மற்றும் வணிகவரி மாவட்டங்கள் தோறும் சேவை மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. வணிகர்களால் எழுப்பப்படும் ஐயங்களைத் தீர்ப்பதற்கு GSTN கட்டணமில்லா உதவி அழைப்பு எண் (01204888999) மற்றும் வணிகவரி கட்டணமில்லா உதவி அழைப்பு எண் (18001036751) உருவாக்கப்பட்டுள்ளன. சரக்குகள் மற்றும் சேவைகள் வரிக்கு சுமூகமாக மாறிடும் பொருட்டு வரி செலுத்துவோருக்கு மற்றும் பிற சம்பந்தபட்டவர்களுக்கு தகவல்கள் அளித்திட, கற்பித்திட மற்றும் உதவிட அச்சு மற்றும் மின்னணு ஊடகம் மூலமாக பெருமளவில் பிரசாரம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சரக்குகள் மற்றும் சேவைகள் வரிக்கு சுமூகமாக மாற்றம் செய்வதற்காக தமிழ்நாட்டில் உள்ள வணிகர்களுக்கு அனைத்து வகையான உதவிகளும் அளித்திடும் முயற்சியில் துறை உறுதியாக உள்ளது.

## 8. வணிகர் நலன்

### i) வணிகர் நல வாரியம்

வணிகர்களின் நலனுக்காக தமிழ்நாடு வணிகர் நல வாரியம் தோற்றுவிக்கப்பட்டு பல்வேறு நலத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. வாரியத்தின் தொகுப்பு நிதியிலிருந்து பெறப்படும் வட்டித் தொகையிலிருந்து நலத் திட்ட உதவிகள் வழங்கப்படுகிறது. இத்தொகுப்பு நிதி 2012–ஆம் ஆண்டில் ரூ.2 கோடியிலிருந்து ரூ.5 கோடியாக உயர்த்தப்பட்டது. தொகுப்பு நிதியுடன், வணிகர்கள் உறுப்பினர்களாக பதிவு பெறும் போது அவர்களால் செலுத்தப்படும் சந்தாத்தொகைக்கு இணையாக அரசின் மானியம் வழங்கப்படுகிறது. சட்டமன்ற பேரவையில் விதி எண்.110–ன் கீழ் முன்னாள் முதலமைச்சரின் அறிவிப்பிற்கிணங்க வாரியத்தின் தொகுப்பு நிதி ரூ.5 கோடியிலிருந்து ரூ.10 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

### ii) உறுப்பினர் புதுப்பித்தல் கட்டணம்

உறுப்பினர் புதுப்பித்தல் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களித்தும், 2006–ஆம் ஆண்டைய தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் சட்டத்தின்

கீழ் பதிவு பெறாத, தொழில் வரி உச்ச வரம்புக்கு கீழே உள்ள சிறு வணிகர்களும் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளிடமிருந்து பெற்ற உரிய உரிமத்தின் அடிப்படையில் இவ்வாரியத்தில் உறுப்பினர் ஆகவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**iii) நலத்திட்ட உதவிகள்**

தமிழ் நாடு வணிகர் நல வாரியத்தின் உறுப்பினர்களுக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கும் குடும்பநல உதவி, மருத்துவ உதவி, கல்வி உதவி போன்ற பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

**9. கணினிமயமாக்கல்**

**i) முழுமையான கணினிமயமாக்கல் திட்டம்**

துறையின் முழுமையான கணினிமயமாக்கல் திட்டத்திற்கு ஐந்தாண்டுகளுக்கு ரூ.230.95 கோடி அனுமதி வழங்கப்பட்டு ரூ.179.98 கோடிக்கு இறுதி செய்யப்பட்டது. திருவாளர்கள் டாடா கன்சல்டன்சி சர்வீசஸ் என்கிற நிறுவனம் திட்ட ஒருங்கிணைப்பாளராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் முதன்மையான குறிக்கோள்கள் –

- வணிகர்களுக்கான சேவையை மேம்படுத்துதல்
- எங்கிருந்தும் எந்நேரத்திலும் சேவைகளை பயன்படுத்திக் கொள்ளும் வசதி
- துறையுடனான நேரடி தொடர்பு குறைக்கப்பட்டு குறைந்த நேரத்தில் சேவைகள்
- மேலும் அதிகமான வழிகளில் சேவைகள் வழங்குதல்
- சேவைகள் வழங்குவதில் வெளிப்படைத் தன்மை
- துறையின் மேம்படுத்தப்பட்ட வரி வருவாய் ஈட்டுவதற்குண்டான குறிக்கோளை அடைய உதவும் வழிமுறைகள்
- வரி நிர்வாகத்தை மேம்படுத்த கணினி சார்ந்த முடிவெடுக்கும் அமைப்பு
- பிற வரிவசூல் செய்யும் துறைகளின் ஒத்துழைப்புடன் வரிவருவாயினை மேம்படுத்துதல்
- துறையின் நேரத்தை விரயம் செய்யும் மற்றும் மதிப்பு கூடுதல் இல்லாத நடவடிக்கைகளை பெரிதும் குறைப்பதன் மூலம் துறை அலுவலர்களை அதிக வரிவருவாய் ஈட்டும் நடவடிக்கைகளில் முழுக் கவனம் செலுத்த வகை செய்தல்

- சிறந்த அமைப்பு சார்ந்த முடிவுகளை எடுப்பதற்கான மேம்படுத்தப்பட்ட மேலாண்மை அறிக்கைகளை உருவாக்கும் திறன்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் இந்தத் திட்டம் **29.01.2016** அன்று துவக்கி வைக்கப்பட்டது.

இந்தத் திட்டத்தின் மூலமாக வணிகர்களுக்கு கீழ்க்கண்ட வசதிகள் வழங்கப்பட்டுள்ளது:-

**ii) இணையவழி பதிவு**

வணிகர்கள் தங்களது பதிவுச் சான்றிதழைப் பெற இணையவழியில் விண்ணப்பிக்கும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. வணிகவரி அலுவலகங்களுக்கு நேரில் செல்லாமலேயே பதிவு எண் பெறத் தேவையான விண்ணப்பம் மற்றும் அனைத்து ஆவணங்களையும் இணையவழியாக பதிவேற்றம் செய்து, பதிவுச் சான்றிதழை பதிவிறக்கம் செய்துக் கொள்ளலாம்.

**iii) இணையவழியில் சோதனைச் சாவடி படிவங்கள் உருவாக்குதல் (படிவம் JJ, KK, LL மற்றும் MM)**

வணிகர்களின் சரக்கு போக்குவரத்திற்காக சோதனைச் சாவடிகளில் சமர்ப்பிக்கப்படும் படிவங்களான படிவம் JJ, KK, LL மற்றும் MM ஆகியவற்றை வணிகவரி அலுவலகங்களுக்குச் செல்லாமல் புதிய இணையதளம் https://ctd.tn.gov.in மூலம் உருவாக்கிக் கொள்ளும் வசதியும் அறிமுகப்படுத்தப்பட்டது.

**iv) மாதாந்திர நமூனாக்கள் சமர்ப்பித்தல்**

வணிகர்கள் தங்களது மாதாந்திர நமூனாக்களை (ஜுன் 2016 மாதம் முதல்) புதிய இணையதளம் https://ctd.tn.gov.in மூலம் மட்டுமே புதிய வடிவத்தில் இணைப்புகளுடன் சமர்ப்பிக்க வசதி செய்யப்பட்டுள்ளது. தற்போது சுமார் **4,35,000** வணிகர்கள் தங்களது மாதாந்திர நமூனாக்களை சமர்ப்பித்து வருகிறார்கள்.

**v) இணையவழியில் வரி செலுத்துதல்**

வங்கிகளின் இணைய தளம் மற்றும் வங்கிகளில் செலுத்துச் சீட்டு மூலம் வரி செலுத்துதல் ஆகிய வழியில் வணிகர்கள் வரி செலுத்தும் வசதி

புதிய இணைய தளம் https://ctd.tn.gov.in மூலம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. அரசினால் அங்கீகரிக்கப்பட்ட 31 வங்கிகள் மூலம் இணையவழியிலும், 6 வங்கிகளில் செலுத்துச் சீட்டு மூலமும் வரி செலுத்தும் வசதி செய்யப்பட்டுள்ளது.

தற்போது, சுமார் 1,70,000 வணிகர்கள் மாதந்தோறும் ரூ.5,200 கோடி வரியினை (துறையின் மொத்த வரி வருவாயின் 95 சதவீதம்) இணையதளம் மூலம் செலுத்தி வருகிறார்கள்.

### vi) மின்னணு முறையில் படிவங்கள் `C' மற்றும் `F' உருவாக்கிக் கொள்ளுதல்

மின்னணு முறையில் சமர்ப்பிக்கப்படும் மாதாந்திர நமூனாக்களின் அடிப்படையில் வணிகர்கள் தாங்களே `C' மற்றும் `F' படிவங்களை இணையதளம் மூலம் உருவாக்கிக் கொள்ளும் வசதி நவம்பர் 2012 முதல் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த வசதியை பயன்படுத்துவதன் மூலம் வணிகர்கள் தங்களுக்கான படிவங்களைப் பெற வரிவிதிப்பு அலுவலகங்களுக்கு நேரில் செல்ல வேண்டிய தேவை குறைகிறது. தற்போது வணிகர்கள் அனைத்து, சட்டரீதியான படிவங்களையும் (C, F மற்றும் H) இணையதள மூலம் உருவாக்கிக் கொள்ளும் வசதி செய்யப்பட்டுள்ளது.

**vii) ஏற்றுமதியாளர்கள் வரி திருப்புகை பெறுவதற்காக, கேட்பு படிவத்தைத் தாக்கல் செய்யும் வசதி**

பூஜ்ய வரி விற்பனையில் உள்ளீட்டு வரி திரும்பக் கோரும் ஏற்றுமதியாளர்களுக்கு, மின்னணு முறை மூலம் படிவம் 'W' தாக்கல் செய்யும் நடைமுறை ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த மென்பொருள் அமல்படுத்தப்பட்டபின், தற்போதைய நடைமுறையைக் காட்டிலும் விரைவாக ஏற்றுமதியாளர்களுக்கு வரித் திருப்புகை கிடைக்கிறது. வரித் திருப்புகையின் அவ்வப்போதைய நிலையினை இணையதளத்தின் வாயிலாக அறியும் வசதி உள்ளது. மேலும், வணிகர்கள் அலுவலகத்திற்கு நேரடியாக வர வேண்டிய தேவை மிகவும் குறைகிறது. வரி திருப்புகைக்கு விண்ணப்பிப்பதில் தொடங்கி வணிகவரி அலுவலரின் ஆணையை பதிவிறக்கம் செய்வது வரை அனைத்தும் இணையதள வழியில் செய்து கொள்ள வசதி செய்யப்பட்டுள்ளது. ஏற்றுமதி விற்பனையை செல்லத்தக்கதாக்குவதற்கு வெளி நாட்டு வர்த்தக இயக்குநரகத்துடன் (Directorate General of Foreign Trade) புரிந்துணர்வு ஒப்பந்தம் (Memorandum of

Understanding) கையொப்பமிடப்பட்டு e-BRC (Electronic Bank Realization Certificate) விவரங்கள் சரிபார்க்கப்படுகிறது.

**viii) இணையதள வழியில் வருடாந்திர நமூனாக்களை சமர்ப்பித்தல்**

வணிகர்கள் மின்னணு முறையில் வருடாந்திர நமூனாக்களை சமர்ப்பிக்கும் வசதி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. சுமார் 4 லட்சத்திற்கும் மேற்பட்ட வணிகர்கள், இவ்வசதி மூலம் தங்களது 2016–2017 ஆண்டுக்கான நமூனாக்களை மின்னணு முறையில் சமர்ப்பித்துள்ளனர்.

**ix) மற்ற இணையவழி சேவைகள்**

வணிகப் பெருமக்களுக்காக கீழ்க்கண்ட வசதிகள் / சேவைகள் https://ctd.tn.gov.in என்ற வலைதளத்தில் செய்து தரப்பட்டுள்ளன:–

- சட்டங்கள், விதிகள், படிவங்கள், சுற்றறிக்கைகள், தெளிவுரைகள், அரசு ஆணைகள் மற்றும் அறிவிக்கைகள் அறியும் வசதி
- வணிகர் பற்றிய விவரங்கள், செலுத்திய வரி போன்ற விவரங்களை அறிய பேரேடு வசதி

- பொருட்களின் அட்டவணை மற்றும் வரிவிகிதம் தெரிந்து கொள்ளும் வசதி
- வரி செலுத்துவோர் அடையாள எண் அல்லது பெயர் மூலம் வணிகர்களின் விவரங்களைத் தெரிந்துக் கொள்ளும் வசதி

## x) துறைக்கு வழங்கப்பட்டுள்ள இணையவழி வசதிகள்

1. வரிவிதிப்பு அலுவலகங்களில் வணிகர்கள் சம்மந்தப்பட்ட அனைத்துப் பணிகளும் Work Flow System மென்பொருள் மூலம் நிறைவேற்றப்படுகிறது.
2. வணிகர்களுக்கான பதிவுச் சான்றிதழ் மற்றும் பிற பணிகளுக்கு கையொப்பமிட துணை வணிகவரி அலுவலர் முதல் அதற்கு மேற்பட்ட பதவியில் உள்ள அனைத்து அலுவலர்களுக்கும் மின் சமிக்ஞை கையொப்பம் (Digital Signature Certificate) வழங்கப்பட்டுள்ளது.
3. மென்பொருள் மூலம் வரிவிதிப்பு ஆணைகள்
4. அனைத்து புள்ளியியல் அறிக்கைகளையும் இணைய வழியில் உருவாக்கிக் கொள்ளும் வசதி.
5. இணையவழி மற்றும் வங்கிக் கிளைகளில் செலுத்தப்படும் வரி விவரங்கள் மூலம் எளிதில் வரி வருவாய் அறிக்கைகளை உருவாக்கிக் கொள்ளும் வசதி.

### xi) வணிகர்களை சரக்குகள் மற்றும் சேவைகள் வரி இணையதளத்திற்கு மாற்றுதல்

சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (GST) 1.7.2017 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதால் அனைத்து பதிவு பெற்ற வணிகர்களும் சரக்குகள் மற்றும் சேவைகள் வரி இணையதளத்தில் இணைய வேண்டியது அவசியமாகிறது. இதற்கென வணிகர்களுக்கு உதவும் வகையில் வணிகவரித்துறையின் சார்பில் மாநிலத்திலுள்ள அனைத்து முக்கிய நகரங்களிலும் சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன.

இதுவரை, சுமார் 91 சதவிகிதத்துக்கும் அதிகமான பதிவு பெற்ற வணிகர்கள் தங்கள் விவரங்களை சரக்குகள் மற்றும் சேவைகள் வரி இணைய தளத்தில் பதிவு செய்துள்ளனர்.

### xii) தகவல்கள் மீளப் பெறுவதற்கான ஆய்வுக் கூடம்

துறையின் தகவல்களை மீளப் பெறும் ஆய்வுக் கூடமானது, கடைத் தணிக்கையின் போது வணிகர்களிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்ட பல்வேறுவிதமான மின்னணு சேமிப்பு உபகரணங்களிலிருந்து, அவர்கள் தொழில்நுட்ப உதவியுடன் மேற் கொண்டுள்ள வரி ஏய்ப்பினையும் மற்றும் அதிநவீன தவறுகளையும் கண்டுபிடிக்க உதவுகிறது.

## 10. உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்

### அ. சென்னை நீங்கலாக பிற இடங்களில் வணிகவரி வரிவிதிப்பு வட்டங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டுதல்

பணியாளர்கள் மற்றும் வணிகர்களுக்கு கூடுதல் வசதி செய்திடவும் பணி செய்வதற்கு உகந்த சூழ்நிலையை உருவாக்கிடவும், சொந்த கட்டடங்கள் தேவை என்பதைக் கருத்திற் கொண்டு, 2011–2012–ஆம் ஆண்டில் ரூ.23 கோடி செலவில், 39 அலுவலகங்களை உள்ளடக்கிய 16 கட்டடங்கள் கட்டுவதற்கு நிதி ஒப்பளிப்பு அளிக்கப்பட்டது. இவற்றில் 15 இடங்களில் கட்டுமானப் பணிகள் நிறைவுற்று, அவற்றில் அலுவலகங்கள் இயங்கி வருகின்றன.

2012–2013–ஆம் ஆண்டில் ரூ.11.18 கோடி செலவில், 16 அலுவலகங்களை உள்ளடக்கிய 10 கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டு, அலுவலகங்கள் இயங்கி வருகின்றன.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 13.5.2013 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், சட்டப் பேரவை விதி எண் 110–ன் கீழ், செய்த அறிவிப்பிற்கிணங்க 2013–2014–ஆம் ஆண்டில், ரூ.10.93 கோடி செலவில், 9 வணிகவரி அலுவலகங்களை உள்ளடக்கிய 7 கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டு, அலுவலகங்கள் இயங்கி வருகின்றன.

**ஆ. சென்னையில் இயங்கி வரும் வரிவிதிப்பு அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டுதல்**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் **07.08.2014** அன்று சட்டமன்றப் பேரவையில் சட்டப் பேரவை விதி எண் **110**–ன் கீழ் சென்னையிலுள்ள **70** வரிவிதிப்பு வட்டங்கள் மற்றும் அதிக வரிசெலுத்துவோர் பிரிவு ஆகியவற்றிற்கு வடசென்னை மற்றும் தென்சென்னையில் இரண்டு வணிகவரி வளாகங்கள் ரூ.**60** கோடி செலவில் கட்டப்படும் என அறிவிக்கப்பட்டதற்கிணங்க, தென்சென்னையில் **52** வணிகவரி மற்றும் **4** பதிவுத்துறை அலுவலகங்கள் இயங்க ரூ.**51.98** கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த வளாகம் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும், வடசென்னையில் ரூ.**25.25** கோடி மதிப்பீட்டில், **34** வணிகவரி அலுவலகங்களுக்கான ஒருங்கிணைந்த வளாகம் கட்டுவதற்கும் ஒப்புதல் அளிக்கப்பட்டு, கட்டடப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

## இ. ஒருங்கிணைந்த வணிகவரி அலுவலக வளாகம் கட்டுதல்

**2015–2016** ஆம் ஆண்டு வணிகவரித் துறையின் மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களால் **21.09.2015** அன்று சட்டமன்றப் பேரவையில் வெளியிடப்பட்ட அறிவிப்பிற்கிணங்க, திருவள்ளூர் மாவட்டம், பூவிருந்தவல்லி வட்டம், நசரத்பேட்டையில் **17** வணிகவரி அலுவலகங்களை இடமமர்த்த ரூ.**10.00** கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த வணிகவரி அலுவலக வளாகம் கட்டுவதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு, கட்டடப் பணிகள் தொடங்குவதற்கான முதற்கட்டப் பணிகள் நடைபெற்று வருகிறது.

## ஈ. வரிவிதிப்பு அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டுதல்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் **31.08.2016** அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், சட்டப் பேரவை விதி எண் **110**–ன் கீழ் கிருஷ்ணகிரி, நாமக்கல் மற்றும் பழனி ஆகிய இடங்களில் **9** வணிகவரி அலுவலகங்களை இடமமர்த்த கட்டடங்கள் கட்டப்படும்

என்று அறிவிக்கப்பட்டது. அதற்கிணங்க மேற்கண்ட இடங்களில் கட்டடங்கள் கட்டுவதற்கு ரூ.6.40 கோடி நிர்வாக மற்றும் நிதி ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. 2017–2018–ஆம் ஆண்டில் இக்கட்டடங்கள் கட்டுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

**உ. கட்டடப் பராமரிப்பிற்கு கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்தல்**

மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களால் 21.09.2015 அன்று சட்டமன்றப் பேரவையில் வெளியிடப்பட்ட அறிவிப்பிற்கிணங்க, ரூ.5.20 கோடி மதிப்பீட்டில் வணிகவரி அலுவலகக் கட்டடங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும், முழுமையான கணினி மயமாக்கல் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட விலை உயர்ந்த தகவல் தொழில்நுட்ப சாதனங்களைப் பாதுகாக்கும் வகையில் வணிகவரி அலுவலகக் கட்டடங்களை பொதுப்பணித்துறை மூலம் பழுது பார்ப்பதற்கும், பராமரிப்பதற்கும், அலுவலகங்களுக்கு தேவையான தளவாடங்களை டான்சி மூலம் பெறுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**ஊ. வாகனங்கள் வாங்குதல்**

வணிகவரித் துறைக்கு ஒப்பளிக்கப்பட்ட 238 வாகனங்களில் 217 வாகனங்கள் உபயோகத்திற்கு ஏற்ற நிலையில் உள்ளன. பழுதடைந்த நிலையிலுள்ள வாகனங்களுக்கு பதிலாக அதே அளவிலான புதிய வாகனங்கள் மாற்றப்பட்டு வருகின்றன.

2012–2013–ஆம் ஆண்டில் ரூ.86.38 லட்சம் செலவில் 16 வாகனங்கள் வாங்கப்பட்டுள்ளன.

2014–2015–ஆம் ஆண்டில் ரூ.124.12 லட்சம் செலவில் 22 வாகனங்கள் வாங்கப்பட்டுள்ளன.

2015–2016–ஆம் ஆண்டில் ரூ.84.31 லட்சம் செலவில் 14 வாகனங்கள் வாங்கப்பட்டுள்ளன.

2016–2017–ஆம் ஆண்டில் ரூ.29.58 லட்சம் செலவில் 5 வாகனங்கள் வாங்கப்பட்டுள்ளன.

2017–2018–ஆம் ஆண்டில் ரூ.65.68 லட்சம் செலவில் 10 பொலிரோ ஈர்ப்புகள் வாங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## 11. 2005–ஆம் ஆண்டு தகவல் அறியு ம் உரிமைச் சட்டம்

அரசு அமைப்புகள் வெளிப்படையாக இயங்குவதற்காக, 2005–ஆம் ஆண்டு தகவல் அறியும் உரிமைச் சட்டம் இயற்றப்பட்டது. வணிகப் பெருமக்களுடன் நேரடித் தொடர்பு கொண்டுள்ள

வணிகவரித்துறை அதன் செயல்பாடுகள் எளிமையாகவும், வெளிப்படையாகவும் இருப்பதை உறுதி செய்கிறது. இக்குறிக்கோளை எய்திடும் நோக்கில், 2005–ஆம் ஆண்டு தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பெறப்பட்ட அனைத்து மனுக்களுக்கும் இத்துறை சிறப்பு முக்கியத்துவம் அளித்து, உரிய தகவல்களை உரிய காலக்கெடுவிற்குள் அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் அளித்து வருகிறது.

**கே.சி. வீரமணி**
**வணிகவரித்துறை அமைச்சர்**